பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 11 திங்கட்கிழமை 28.08.2023 கதிர் 290

# இந்தியா-இலங்கை நாடுகளிடையே பாலம் அமைப்பது முட்டாள்தனம்

## நாம் இந்திய அடிமைகள் கிடையாது என கர்தினால் மல்க்கம் ரஞ்சித் விளாசல்

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது முட்டாள் தனமான செயல். இதன் மூலம் இந்தியாவால் ஏற்படும் பிரச்சினைகளை அதிகரிக்கப்போகிறார்கள். மக்களின் கருத்தைக் கேட்காமல் இந்தப் பாலத்தை அமைக்கக்கூடாது. இலங்கை இந்தியாவின் அடிமை நாடு கிடையாது. இத்தகைய நிலையை ஏற்படுத்துபவர்களை ஆட்சியிலிருந்து தூக்கி எறியத் தயங்கக்கூடாது.

இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆவேசமாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ராகம தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட வழிபாடுகளை அடுத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டினை துண்டுதுண்டாக ☞2

## இது ரகசியம் அல்ல!

நல்லூர் கந்தசாமி கோயில் கொடியேறியிருக்கும் நிலையில், நரதரால் சிவபெருமான் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் பற்றிய கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இதனால் முருகன் பழனியாண்டவராக இடுப்பில் ஒரு துண்டோடு கோபித்துக்கொண்டு போன கதையும் எல்லோருக்கும் தெரியும். எல்லாம் ஒரு மாம்பழத்திற்காகத்தான்.

கதை தெரியாதவர்களுக்காக அதன் இரத்தினச் சுருக்கத்தை இங்கு சொல்லிவிடுகின்றேன். ஒரு நாள் கைலாயத்திற்கு வந்த நாரதர் சிவபெருமான் உமாதேவியாரிடம் ஒரு மாம்பழத்தைக் கொடுத்தார். ஒரேயொரு மாம்பழத்தை எப்படி முருகன், பிள்ளையார் என்று இரு பிள்ளைகளுக்கும் கொடுக்க முடியும் என்று கருதிய சிவபெருமான், யார் இந்த உலகை முதலில் சுற்றிவருகிறார்களோ அவர்களுக்கே மாம்பழம் என்று அறிவித்துவிட்டார். அதைக் கேட்டதும் முருகன் தனது வாகனமான மயில் மீது ஏறி உலகைச் சுற்றக் கிளம்பிவிட்டார். பிள்ளையாரோ ☞2

## கூட்டமைப்பு கண்டனம்

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை வன்மையாக கண்டிக்கிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இனவாதத்தை வேண்டுமென்றே தூண்டுகிற முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்துக்கு முன்பாக சனிக்கிழமை பௌத்த தேரர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான ☞2

# அடுத்த அதிபர் தேர்தலில் ரணில் நிச்சயம் வெல்வார்

## ஐ.தே.க. செயலாளரின் ஆசை இது

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரவித்தார்.

ஆனமடுவில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணி போட்டியிடவுள்ளது. அத்துடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கவுள்ளார். அவர் நிச்சயமாக வெற்றி பெறுவார். இதுதான் கள யதார்த்தமாக உள்ளது.

இந்தப் புரிதல் இல்லாமல் எதிர்அணியினர் வீணான பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளார்கள். எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சி பரந்துபட்ட கூட்டணியுடன் களமிறங்குவதற்குத் தன்னைத் ☞2

# பகையை மறந்து தாய்வீடு திரும்புமாறு ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு அழைப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி விடுத்தது

கட்சியைவிட்டு வெளியேறிய அனைவரும் பழைய பகைமைகளை மறந்து தாய்வீடு திரும்பவேண்டுமென அக்கட்சியின் முக்கியஸ்தரான ரவி கருணாநாயக்க பகிரங்கமான அழைப்பு விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது நாடு கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. அது பொருளாதார, அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் நிறைந்ததாவுள்ளது.

கடந்தசிலவருடங்களுடன் ஒப்பிடுகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த ஆண்டு மிகவும் மோசமாகப்பாதிக்கப்பட்டிருந்த பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழலை மாற்றியமைத்து, மக்கள் நிம்மதியாக சுவாசிக்கக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளார்.

நாடு இருந்ததைவிட சிறப்பாக இருந்தாலும், மக்களது அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிட்டதாக கூற முடியாது. மக்கள் மிகவும் கடினமான சூழலிலேயே வாழ்கின்றனர்.

2048ஆம் ஆண்டாகும் போது புதிய வளர்ந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தில், அடுத்த சில ஆண்டுகளில் மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப புதிய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட ☞2

# அதானியின் காற்றாலை 2025 ஜனவரி தயாராகும்

அதானி கிரீன் எனர்ஜி (Adani Green Energy) நிறுவனத்தால் உருவாக்கப்படும் மன்னார் மற்றும் பூநகரியின் 500 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் எதிர்வரும் 2025 ஜனவரி மாதம் நிறைவடையும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எதிர்காலத்திட்டங்களுக்கு அரசாங்க அனுமதியைப் பெறுதல், காணி சுவீகரிப்பு, மின் விநியோக பாதைகளை நிர்மாணித்தல், மின்சாரம் கொள்வனவு ஒப்பந்தங்கள், நிதி தேவைகள், திட்ட நிர்மாண காலக்கெடு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் மொத்த மின்சாரத் தேவையில் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பூர்த்தி செய்யும் இந்த ஆட்சியின் இலக்கை பூர்த்தி செய்யும் வகையில் 2030ஆம் ஆண்டளவில் 6 பெருமளவிலான புதுப்பிக்கத்தக்க திட்டங்கள் நிறுவப்படவுள்ளன.

பூநகரி பிரதேசத்தில் 700 மெகாவாட்டிற்கும் அதிகமான நிலத்தடி சூரிய மின்கல (சோலார் பேனல்) ஆற்றல் திட்டத்தில் 134 மெகாவாட்கள் தேசிய அமைப்பில் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது.

மின்கலங்களில் மின்சாரத்தை சேமித்து 700 மெகாவாட் வரை தேசிய அமைப்பை எளிதாக்குவதற்கான திட்டத்தை 2024 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்படும் 150 மெகாவாட் நிலத்தடி சோலார் ☞2

# ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளைகள் நேற்றுப் பிறந்துள்ளன.

மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருத்துவக் குழுவினரின் கவனிப்பில் சுகப்பிரசவம் நிகழ்ந்ததுடன் குழந்தைகள் ☞2

# 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' நட்டஈடு குறித்து நாடாளுமன்றில் அமைச்சர் விளக்கம்

நாடு முழுவதும் 18 மாவட்டங்களில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக சுமார் 85,000 குடும்பங்கள் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வறட்சியினால் 18 மாவட்டங்களில் 291,715 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். 5இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் ஓரளவுக்கேனும் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, ☞2

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை எதிர்த்து இன்று பெரும் போராட்டம்

## கொழும்பு கோட்டை தொடர்ந்து நிலையம் முன்பாக

ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கு பயன்படுத்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னால் நண்பகல் 12 மணிக்குப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆட்சியாளர்களால் அமைச்சரவையில் ஜுலை முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியக் கணக்குகளில் உள்ள சுமார் 25 இலட்சம் ரூபா உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த இந்த ஆட்சி முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி, இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதிய கணக்குகளின் மீது சுமத்தப்படும்போது, அது அனைத்து ஊழியர்களினதும் சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகையை எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமற் செய்யும் அபாயம் உள்ளது.

இதன் மூலம் ☞2

## உள்ளூரில் காணியற்றவர்களின் எதிர்ப்பையும் மீறி

# இயக்கச்சியில் 120 ஏக்கர் நிலம் நிறுவனத்துக்குத் தாரைவார்ப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையின் கீழ் உள்ள 120 ஏக்கர் நிலமும் இராணுவப் பாதுகாப்புடன் துப்புரவு செயப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலத்தை வெளிமாவட்டக்காரர்களுக்கு வழங்குவதற்கு உள்ளூரில் உள்ள காணியற்றவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையிலும் சிங்களவர்களுக்கு நிலம் தாரைவார்க்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தர்மக்கேணி கிராமத்தில் உள்ள 120 ஏக்கர் நிலமே இவ்வாறு புத்தளத்தைச் சேர்ந்த ஓர் தனியார் நிறுவனம் ஒன்றின் பெயரில் துப்பரவு செய்யப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு இரகசியமாக பதிவு செய்யப்பட்டு 19 பேருக்கு தலா 5 ஏக்கர் வீதம் இந்த நிலத்தை வழங்க காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. இது தொடர்பான செய்தி வெளியாகிய நிலையில் அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

அதே நிலத்தையே மாவட்ட நிர்வாகம் எவற்றிற்கும் தெரியாது புத்தளத்தைச் சேர்த்த ஒரு நிறுவனத்திற்கு தற்போது காணி சீர்திருத்த ஆணைக்குழு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்த நிறுவனம் அந்த நிலத்தை தலா 20 ஏக்கர் வீதம் 5 தனி நபர்களுக்கு வழங்கியுள்ளது என்றும் கூறப்படுகின்றது. இதன் உண்மைத் தன்மையை அறிய காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலக அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முயன்றபோதும் பதலளிக்கப்படவில்லை.

இப்போது இந்த நிலங்களைப் பெற்றுள்ள 5 பேரும் தென் இலங்கையைச் சேர்ந்த சிங்களவர்கள் என்று இந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். காணியைப்பெற்றுள்ளவர்கள் ஜே.சி.பி இயந்திரம் மூலம் கடந்த 3 தினங்களாகிக் காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டபோது அப் பகுதி மக்களும் அந்த நிலம் ஏற்கனவே வழங்கப்பட்ட தமிழர்களும் சென்று விவரம் கேட்டு தகறாறு செய்துள்ளனர். இதையடுத்து இராணுவத்தினரை இறக்கி பாதுகாப்பு வழங்கி துப்புரவுப் பணிகள் இடம்பெறுகின்றன. ☞2

# டலஸ்-அனுர திருமணத்தினால் குழந்தைப் பாக்கியம் கிட்டாது

## மொட்டுக் கட்சி எம்.பி. கிண்டல்

டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திருமணம் குழந்தைப் பாக்கியத்தை பெற்றுக்கொடுக்காது என்று பொது ஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்த கிண்டலடித்துள்ளார்.

தென்னிலங்கையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த இரு தலைவர்களும் கடந்த வாரம் நேரில் சந்தித்து ஆட்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவது தொடர்பாகப் பேசியது குறித்தே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவின் ஆயுட்காலம் முடிந்துவிட்டதாகப் பலர் கருதுகின்றார்கள். அதனால் அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியுள்ளார்கள். அவர்களின் வெளியேற்றத்தால் எமது கட்சிக்கு எவ்விதமான இழப்பும் ஏற்படப்போவதில்லை.

அடுத்து வரும் எந்தவொரு தேர்தலையும் முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். அதற்குஎம்மிடத்தில் பலமான அணியினரும் உள்ளனர்

டலஸ் அழகப்பெருமவுக்கு ஜனாதிபதியாகும் ஆசை ஏற்பட்டுள்ளது. அதற்காக அவர் முதலில் எம்மை விமர்சித்துவிட்டு, சஜித்தை திருமணம் செய்து ☞2

## இனி இது .....

தாய், தந்தையரே உலகம் என்றுஅவர்களைச்சுற்றிவந்து அந்த மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டார். திரும்பி வந்த முருகன் தனக்கு மாம்பழம் கிடைக்காததால் கோபமடைந்து அனைத்தையும் துறந்து இடுப்பில் ஒரு சிறு துண்டோடு பழனியாண்டவராகச் சென்றுவிட்டார்என்பதுகதை.

நாரதர் கொடுத்த அந்த மாம்பழம் என்ன அற்புதக் கனியோ இல்லையோ தெரியாது. ஆனால், வவுனியாவில் இப்போதெல்லாம் மாம்பழங்கள் அற்புதக் கனிகளாக மாறி வருகின்றன. அது பற்றிய தகவல் ஒன்றைத்தான் இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

வவுனியா மாவட்டம் உக்குளாங்குளத்தில் உள்ள ஸ்ரீசித்திவிநாயகர்விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது மாம்பழம் ஒன்று 162,000ரூபாய்க்குஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய வருடாந்த உற்சவத்தின் 6ஆம் நாள் மாம்பழ திருவிழாவான சனிக்கிழமை மாலை விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது.

இந்த மாம்பழத்தை வாங்குவதற்குத் தொடக்கம் முதலே பலத்த போட்டி காணப்பட்டது. ஏலம் உச்சத்தை அடைந்து இறுதியில் மாம்பழம் 1 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு மாம்பழம்விற்கப்பட்டுள்ளது.

இந்த மாம்பழத்தை வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில்வசிக்கும்ச.சிந்துஜா என்பவர் வாங்கியிருந்தார்.

இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்தான் வவுனியா மாவட்டத்தில்இப்படிமாம்பழம் ஒன்று95ஆயிரம்ரூபாவிற்கு ஆலயத்தில் ஏல விற்பனை செய்யப்பட்டிருந்தது. தவசிக்குளத்தில் உள்ள ஷ்ரீ பாலவிநாயகர் ஆலயத் திருவிழாவின்போதும் கடவுளுக்குப் படைத்த இதுபோன்றமாம்பழம்ஒன்று 95 ஆயிரம் ரூபாவிற்கு ஏலத்தில்எடுக்கப்பட்டிருந்தது. ஓகஸ்ட் 13 நடந்த இந்த ஏலத்தில் பூசைப் பொருட்கள் ஏலம்விடப்பட்டன. அப்போது இந்த மாம்பழத்தினை லண்டனில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் 95 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இப்போது ஒரு லட்சத்து 62 ஆயிரம்ரூபாய்க்குமாம்பழம் விற்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடியும்ஆயிரம் பொன்னுக்குச்சமன் என்று சொல்லிக்கொண்டே இந்த மாம்பழங்களை வாங்கியவர்கள்உண்டிருப்பார்களோ என்னவோ!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளுக்குவிற்பனை செய்து முழுமையாக அழிப்பதற்கானநடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவருகிறார்கள். எமது சுதந்திரத்தையும் இறைமையையும்இழக்கச் செய்வதற்கான முட்டாள் தனமானநடவடிக்கைகளே ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்பொழுதுஇந்தியாவிற்கு, இலங்கைக்கும் பாலம் நிர்மாணிக்கப் போவதாக கூறுகிறார்கள். அதற்கான பேச்சுக்கள்முன்னெடுக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தியாவினால் எமது நாட்டுக்கு இருக்கும் பிரச்சினைகள் போதுமானவையாக இல்லையா? பாலத்தை அமைத்துப் பிரச்சினைகளை மேலும் வளர்த்துக் கொள்ளவே ஆட்சியாளர்கள் முனைகிறார்கள்.

இந்தியா நமது நாட்டுக்கு இராணுவத்தை அனுப்பியது. ஒரு காலத்தில் பருப்பினை பலாத்காரமாக விநியோகித்தது. அதுமட்டுமன்றி இந்தியாவின் கட்டாயத்தில் நாம் சில விடயங்களை முன்னெடுக்க வேண்டியநிலைமைக்குத்தள்ளப்பட்டிருந்தோம் என்பதும் உங்கள் அனைவருக்கும் நினைவிருக்கும்.

இவ்வாறு இருக்கின்ற பொழுது பாலத்தை அமைத்தால்இந்தநாட்டின்எதிர்காலம் நன்றாகவா இருக்கும். இந்த முட்டாள் தனமான தீர்மானத்தை யார் எடுத்தது. எமது நாடு சுதந்திரமானது இறைமையைக்கொண்டது. எந்த ஒரு இராஜ்யத்திற்கும் அடிபணிந்துஇருக்கவில்லை. அதுமட்டுமன்றி எமது நாடு இன்னுமொருநாட்டிலிருந்து பிரிந்தும் வரவில்லை.

இலங்கையில் இருந்த மன்னர்கள்இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார கொடுக்கல் வாங்கல்களைச்செய்தார்கள். வேறு எதனையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அடிபணிந்து இந்தியாவுடன் செல்லவில்லை.

தற்பொழுதுதான் எம்மவர்கள்இந்தநாட்டைபடிப்படியாக காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அடிபணியச் செய்துகொண்டி ருக்கின்றார்கள். அந்நியர்களிடம் நாட்டை காட்டிக் கொடுத்தமையால்தான் நிலைமைகள் மோசமாகி வருகின்றன. எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம்.

இந்தியாவுக்கு இலங்கைக்கும் பாலம் அமைப்பதாக இருந்தால்அனைத்து மக்களினதும் கருத்துக்களையும்கேட்கவேண்டும். இது ஜனநாயக நாடாக இருந்தால் அனைத்து மக்களினதும்விருப்புவெறுப்புகளுக்குஅமையவேமுடிவு எடுக்கப்படவேண்டும்.

நாட்டுமக்களிடம்கருத்துக் கணிப்பு நடத்தவேண்டும். அவ்வாறில்லாது பாலம் அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பது தவறானதாகும். அது ஜனநாயகப் பண்பைப் பின்பற்றிய செயற்பாடாக இருக்காது.

அதுமட்டுமன்றி தற்போது நாட்டின்ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வெளிநாடுகளுக்குவிற்பனை செய்கிறார்கள். இறுதியில் எமக்கு மிஞ்சுவது எதுவுமில்லை. இதுவொருநோய். இவ்வாறான நோயால் நாசகார சக்திகள் எமது நாட்டை அடிமைப்படுத்தப் பார்க்கின்றன. இந்த நிலைமையை உருவாக்குபவர்களைஆட்சியிலிருந்து தூக்கி எறிவதற்கும் தயங்கிவிடக்கூடாது. அதற்கானதீர்மானத்தினை நமே எடுக்கவேண்டும் - என்றார்.

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## அதானியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேனல் திட்டம் உள்ளூர் முதலீட்டு கூட்டமைப்பாக நிர்மாணிக்கப்பட்டுவருகிறது.

அதானி கிரீன் எனர்ஜி திட்டத்திற்குத் தேவையான 400கிலோ வோல்ட் டிரான்ஸ்மிஷன் இணைப்பையும் நிறுவனம் பூர்த்தி செய்யும் - என்றார்.

## 85 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், வவுனியா, பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, கண்டி, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 84,643 குடும்பங்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளன.

நிலவும் வறண்ட காலநிலை காரணமாக நாடுமுழுவதும்தண்ணீருக்கு பற்றாக்குறைஏற்பட்டுள்ளதால் பலபகுதிகளுக்கு பௌசர்கள் மூலமேதண்ணீர்விநியோகம் இடம்பெற்று வருகிறது.

யாழ். மாவட்டத்தில் 70,000 க்கும் மேற்பட்டவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலபகுதிகளுக்கு பௌசர்கள் மூலமே இங்கு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது.

அத்துடன், மலையக பகுதிகளிலும் நிலவும் கடுமையான வறட்சியால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் குறைந்துள்ளன. இதனால் பல தோட்டப்புறங்களில் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது -என்றுள்ளது.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார்ப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் ஜனாதிபதி தலைமையில் நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைவரும் கைகோர்க்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழலில் அனைவருக்கும் சிந்திப்பதற்கான காலம் காணப்படுகின்றது. இதனை சரியாக பயன்படுத்திப் பரந்துபட்ட கூட்டணியில் அனைவரும் பங்கேற்று நாட்டின்எதிர்காலத்தைஉறுதி செய்ய வேண்டும் - என்றார்.

## டலஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார். இருப்பினும்அந்த திருமணத்தால்பயனில்லை என்று உணர்ந்தார்.

தற்போது அவர் அநுரகுமாரதிஸாநாயக்கவை திருமணம் செய்து கொள்ள முனைகின்றார். அரசியல் ரீதியான திருமணமாக இருந்தாலும், இந்ததிருமணத்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கப்போவதில்லை. அதவாது, டலஸ் எதிர்பார்க்கும் ஜனாதிபதி பதவி கிடைக்கப்போவதில்லை.

இந்தயதார்த்தத்தினைக் கூட உணரும் அளவிற்கு அவருக்கு அரசியல் பக்கும் காணப்படாததுதான் கவலையாக உள்ளது - என்றார்.

## பகையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

வளர்ந்த நாட்டைக் கட்டியெழுப்புக அரசியல் வேறுபாடுகள்இன்றிகட்சிகள் ஒன்றிணைய வேண்டும். கட்சியைவிட்டுவெளியேறிய உறுப்பினர்கள் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துக்கொண்டவர்கள் மீண்டும் தாய் வீட்டுக்கு திரும்ப வேண்டும்.

ஹரீன், மனுஷாமற்றும் ஹாரிசன் போன்றோர் வழியில் ஏனையவர்களும் ஐ.தே.கவுக்கு மீண்டும் திரும்பவேண்டும். ரணிலால் ஜனாதிபதியாக முடியாது என்பதுதான்பலருக்குஇருந்த பிரச்சினை. ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சதித்திட்டத்தின் மூலம் பிளவுபட்டது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும். இன்று அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர். எனவே பழைய முரண்பாடுகளை மறந்து நாட்டுக்காக அனைவரும்ஒன்றிணைய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் பொருளாதாரத்தை எப்போதும் காப்பாற்றிய கட்சியாகும். மேலும் அனைத்து மதங்களையும் இன மக்களையும் சமமாக நடத்தும் கட்சியாகும்.

இந்நாட்டில்இனம், மதம், சாதிவேறுபாடின்றிநகர்ப்புற, கிராமப்புற சமூகங்களை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே ஒன்றிணைக்க முடியும் - என்றார்.

## உள்நாட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர் சேமலாப நிதி மற்றும்நம்பிக்கைபொறுப்பு நிதி அங்கத்தவர்களுக்கு நிதி ரீதியான உடனடிப் பாதிப்பும், நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாயநிலையும்உருவாகும்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவே இன்றையதின் போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதோடு, இந்தப் போராட்டத்திற்கு, பல்வேறு தொழிற்சங்கங்கள்ஆதரவளிக்கவுள்ளன. மேலும், நாடளாவிய ரீதியில் அடையாள போராட்டங்கள் முன்னெடுக்கப்பவுள்ளது. இன்று கோட்டையில் நடக்கும் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். செயலகம்முன்பாகவும் ஓர்ஆர்ப்பாட்டம்இடம்பெறவுள்ளது. 9 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.


## இயக்கச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் பளையில் குடியிருக்க நிலம் அற்ற குடும்பங்களிற்கு இந்த காணியை அரை ஏக்கர வீதம் வழங்குமாறு பல ஆண்டுகளாக விடுக்கப்படும் கோரிக்கையினைகாணிச்சீர் திருத்த ஆணைக்குழு மறுப்பு தெரிவித்து வருகின்றது.

# தொடர் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராம்

## திடீரென்று சித்தார்த்தன் எம்பி. இப்படி அறிக்கை



மீண்டும் ஓர் இனக் கலவரத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம்சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

அத்துடன், பெரும்பான்மையினத்தவர்களுக்கு ஏற்றவாறு பௌத்த நாட்டை உருவாக்கும் நோக்கத்துடனேயே தற்போதைய ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் செயற்பட்டு வருகின்றனர்எனவும்தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவில் முதலிடத்தில் இருந்த இலங்கை நாட்டை கடைசி நிலைக்கு நகர்த்தியது தற்போதைய அரசியல் வாதிகளின் செயறபாடுகள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் நிவர்த்தி செய்ய வேண்டுமானால் நியமான முறையில் ஆட்சி அமைக்ககூடிய ஒருவர் தலைவராக வரவேண்டும்.

அவ்வாறு இல்லாதபட்சத்தில் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# நோய்வாய்ப்பட்ட 47 வயது பெண்ணையும் விட்டுவைக்காது பாலியல் துஷ்பிரயோகம்

## திருகோணமலையில் சந்தேகநபர் கைது

திருகோணமலை, தெவனிபியவர பகுதியில் 47 வயதுடைய நோயுற்ற பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹதிவுல்வெள தெவனிபியவர பகுதியில் நோயுற்ற நிலையில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த பெண்ணொருவரை பாலியல் துஷ்பிர -யோகம் செய்துள்ளார் எனப் பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அழைப்பெடுத்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார்சந்தேகத்தின்பேரில்இரண்டு பிள்ளைகளின் தந்தையான அதே பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது -

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் உட்பட குறித்த பெண்ணின் கணவர் மற்றும் அயல் வீட்டுக்காரர் கூட்டாக இணைந்து பெண்ணின் வீட்டில் மது அருந்திவிட்டு, மஹதிவுல்வெளபிரதேசத்தில்இடம்பெற்ற இசைக்கச்சேரி நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இதனையடுத்து, கைதான குறித்த சந்தேகநபர்தாம்மதுஅருந்தியவீட்டுக்கு வந்து, நோயுற்ற நிலையில் இருந்த பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதுடன், தனது விருப்பத்துக்கு இணங்காத பட்சத்தில் பெண்ணை தாக்கி காயப்படுத்தியுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட குறித்த பெண் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், விசாரணைகளை மொரவெள பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

## ஒரே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரோக்கியமாகவும் உள்ளனர்.

தாயும் குழந்தைகளும் நலமாக உள்ளனர் என வைத்தியசாலையால்அறிவிக்கப்பட்டுள்ளது.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**
**076 3983858**
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# குருந்தூர் மலை சர்ச்சைக்கு தீர்வு பேரா. சன்ன ஜயசுமன முன்மொழிவு



குருந்தூர் மலையில் சர்ச்சைகள் நீடித்துக்கொண்டிருக்கும் நிலையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் அதிகரித்து வருவதால் அதற்கு நிரந்தரமான தீர்வொன்றை பொதுஜனபெரமுனவிலிருந்துவெளியேறிசுயாதீனமாகசெயற்படும் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் சன்ன ஜயசுமன முன்மொழிந்துள்ளார்.

அவருடைய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

குருந்தி மலையானது (குருந்தூர் மலையானது) தொல்பொருளியல் பகுதியாகும். அதற்கான சான்றாதாரங்கள்பலகாணப்படுகின்றன. ஆகவே அந்தப் புராதன இடத்தினை பேணுவது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

எனினும், குறித்த பகுதியில்பௌத்தர்கள்மற்றும் இந்துக்கள் வழிபாடுகளைச் செய்துவந்ததாகவரலாற்றின் அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, தற்போதைய நிலைமையில், இந்த விடயத்தை மையப்படுத்தி பௌத்தர்கள், இந்துக்கள் இடையே முரண்பாடான நிலைமைகள் வலுவடைவதற்கு இடமளிக்காமல், நிரந்தரமானதொரு தீர்வைக் காண்பது அவசியமாகிறது.

அதன் அடிப்படையில், குறித்த மலையின் கீழ்ப் பகுதியில் உள்ள பிரதேசத்தில் தொல்பொருளியல் விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல், இரு சமயத் தலங்களை நிர்மாணிப்பதே பொருத்தமானதாகும்.

குறிப்பாக, மலையின் கீழ்ப் பகுதியில் தலா ஒவ்வொரு ஏக்கர் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்து மற்றும் பௌத்த தலங்களை நிர்மாணிப்பதன் ஊடாக இருதரப்பினரும்தமது இறை நம்பிக்கைக்கு அமைவாக வழிபாடுகளை முன்னெடுக்க முடியும்.

இதற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமத்தை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். அதன் மூலமாகப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காண முடியும். - என்றார். (05)

# யாழில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி முதியவர் சாவு

குளவிக் கொட்டுக்கு இலக்காகி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை ஒரு மணியளவில் முதியவர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருகையில் -

குறித்தநபர்சனிக்கிழமை காலை 7.45 மணிக்கு தேவாலயத்துக்கு சென்று கொண்டிருந்தபோது பனை மரத்தில் இருந்து கீழே விழுந்த குளவிக்கூட்டில் இருந்த குளவிகள் அவரைக் கொட்டியுள்ளன.

அதனையடுத்து, அவர் மிருசுவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் நேற்றிரவு 11 மணியளவில் மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் நேற்று அதிகாலைஒருமணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தவசிக்குளம், மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இமானுவேல் ஜேசுரட்ணம் (வயது 79) என்கிற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

# ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் இழப்பீடு வேண்டும்

## மகாவலி விவசாய சங்கம் கோரிக்கை

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டும். 40 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கினால் பெரும்போக விவசாயத்தில் விவசாயிகள் ஈடுபடமாட்டார்கள் என மகாவலிவிவசாயவலயத்தின் பொதுச்செயலாளர் புஞ்சிராலரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டில் நிலவும் கடும் வரட்சியான காலநிலையால் 54 ஆயிரத்து 753 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என விவசாயத் துறை அமைச்சு குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. குறைந்தபட்சம் 70ஆயிரத்துக்கும்அதிகமான விவசாய பயிர்செய்கைகள் பாதிக்கப்பட்டிருக்கும்.

அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தால் உடவளவலய விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்குஅரசாங்கம்பொறுப்புக்கூறவேண்டும். சேதனபசளை திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை முழுமையான நட்டஈடு கிடைக்கவில்லை.

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய ஓர் ஏக்கர் விவசாய நிலத்துக்கு 40 ஆயிரம் ரூபா ஒரு ஹெக்டயர் விவசாய நிலத்துக்கு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்க தீர்மானித்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சு குறிப்பிடுகிறது.

2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய இவ்வாறு நட்டஈடு தொகை தீர்மானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு மூடை உரத்தின் விலை 3,000 ரூபாவாகக் காணப்பட்டது.

ஆனால், தற்போது உர மூடையின் விலை 10 ஆயிரம் ரூபாவில் இருந்து ஆரம்பமாகிறது. ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிவசாயிஒருவர் குறைந்தப்பட்சம் ஒன்றரை லட்சம் ரூபாவையேனும் செலவழிக்க வேண்டும்.

2017 ஆம் ஆண்டு சுற்றறிக்கைக்கு அமைய 40 ஆயிரம் ரூபா நட்டஈட்டை எவரும் ஏற்க போவதில்லை. குறைந்தளவிலானநட்டஈட்டை வழங்கினால் விவசாயிகள் எவரும் எதிர்வரும் பெரும்போக விவசாயத்தில் ஈடுபடமாட்டார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட்டுக் கொள்ள முடியும். - என்றார். (05)

# இந்திய – சீன உறவுகளில் பதற்றமேதும் இல்லை நெருக்கமாகவே உள்ளதாக அலி சப்ரி அறிவிப்பு



இலங்கைக்கும், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கும்இடையிலான இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களும் இல்லைஎன்றுவெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை,சீனஆய்வுக்கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சி நிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுகின்றமையால் எவ்விதமான குழப்பங்களும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், இலங்கைக்குள் போர் மற்றும் ஆய்வுக் கப்பல்கள் விமானங்களின் வருகைகளின் போது வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காக 'நிலையான செயற்பாட்டுப் பொறிமுறை' வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது விரைவில் அமுலாக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அடுத்த வாரம் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விஜயம்செய்யவுள்ளதோடு, ஒக்ரோபர் 25 சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் - 06' வருகை தரவுள்ளது.

இந்த நிலைமையால் இலங்கை, இரு நாடுகளின் அதிகாரப் போட்டி அழுத்தங்களுக்குள் சிக்கியுள்ளதாகவும், இருதரப்பு உறவுகளில் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வெளியான தகவல்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

இலங்கை அரசாங்கம், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு உறவுகளைக்கொண்டுள்ளது. அத்துடன், இரு நாடுகளும் இலங்கைக்கு நீண்டகால ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்றன.

இவ்வாறான நிலையில், சீனாவின் ஆய்வுக்கப்பல் வருகை, அதற்கு முன்னதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் வருகை என்பன இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களையோ பாதிப்புக்களையோ ஏற்படுத்தவில்லை.

குறித்த விடயங்கள் அனைத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்திருக்கிறார். அதேபோன்று சீனாவுக்கு பிரதமர்தினேஷ்குணவர்த்தன விஜயம் செய்திருக்கிறார்.

ஜனாதிபதியின் விஜயத்தின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளுக்குஅமைவாக திருகோணமலையை பொருளாதார அபிவிருத்தி வலயமாகமேம்படுத்துவதற்கு இந்தியாவும் பங்களிக்கவுள்ளது. எரிபொருள், எரிசக்திவிடயத்திலும்அந்நாடு உடன்பாடுகளைஎட்டியுள்ளது.

அதற்கு அமைவாக, செயற்பாட்டுநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்காக எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்து உயர் மட்ட தரப்பினர் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

ஆகவே அவ்விதமான விஜயங்கள் குழப்பங்களை ஏற்படுத்தப்போவதில்லை. இலங்கை அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி வரும் அதேநேரம், இந்தியா, சீனாஆகியநாடுகளுடன்மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கைக்கு வருகை தருகின்ற போர் மற்றும் ஆய்வுக் கப்பல்கள், விமானங்கள் சம்பந்தமாக வெளிப்படைத் தன்மையை பேணும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

'நிலையான செயற்பாட்டு பொறிமுறை' குறித்த வரைவு தயாரிக்கப்பட்டு இறுதியாகியுள்ளது. அதனை அடுத்துவரும் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதனூடாகதேவையற்ற விமர்சனங்கள் மற்றும் அச்சங்களைப்போக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதோடு, சர்வதேச நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை நிலையாக பேணுவதற்கும் உதவியாகஇருக்கும்என்றும் நம்புகின்றோம். - என்றார். (05)

# சிறப்புரிமை என்ற பெயரால் நீதித்துறை குறைமதிப்பீடு

## சபாநாயகரை சந்திக்க சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மீது முன்வைக்கப்படும் தொடர்ச்சியானவிமர்சனங்கள் நீதித்துறையின்கௌரவத்தை குறைமதிப்பீடு செய்வதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின்தலைவர்கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதியை தனிப்பட்ட முறையிலும், அவருடைய தீர்ப்பையும், நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகர கடுமையாக விமர்சனம் செய்திருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் வெள்ளிக்கிழமை கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

அத்தோடுகுறித்தவிடயம் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தார்கள்.

இந்நிலையில், இந்த விவகாரம் சம்பந்தமாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

அண்மைய காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் தொடர்பிலும் சில விமர்சனங்கள் நாடாளுமன்ற சபைக்குள்ளிருந்து வெளியிடப்படுகின்றன. அந்தவகையில், இறுதியாக நாடாளுமன்ற உறுப்பினரால் நீதிபதி ஒருவர் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயங்கள் அனைத்தையும் கவனத்தில் எடுத்துள்ள நாம் இவ்விடயங்கள்சம்பந்தமாகஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமித்துள்ளோம்.

அந்தக் குழுவின் அவதானங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்டமாகஇறுக்கமான நடவடிக்கைகள் சிலவற்றை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோன்று, சபாநாயகர்மஹிந்தயாப்பாஅபேவர்த்தனவையும் நேரில் சந்தித்து இந்த விடயங்கள் சம்பந்தமான எமது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. - என்றார். (05)

# ஹோமாகம வைத்தியசாலை பிரேத அறை பணியாளர் கிருமித்தொற்றால் உயிரிழப்பு

ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கிருமித்தொற்றால் உயிரிழந்துள்ளார்.

சுமார் 26 வருடங்கள் தொழில்நுட்ப உதவியாளராக பிரேத அறையில் கடமையாற்றி வந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலங்களில் இருந்து வெளியேறும் கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த ஊழியர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான ஜயலால் லியனாராச்சி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(05)

# நள்ளிரவில் வீடு புகுந்த கொள்ளைக்கும்பல் வீட்டார் உரக்க கத்தியதால் தப்பியோட்டம்

## யாழில் சம்பவம்



நள்ளிரவு நேரத்தில் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்தவர்களை கட்டிவைத்து கொள்ளையடித்துச் செல்ல முயற்சித்த கும்பல் வீட்டார் உரக்க சத்தமிட்டு கத்தியதால் தப்பியோடிய சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பாற்பண்ணை பகுதியில் உள்ள வீடொன்றினுள்நள்ளிரவுநேரம்ஓட்டை பிரித்துக்கொண்டு முகமூடி அணிந்த மூவர் அடங்கிய கொள்ளைக்கும்பல் வீடொன்றினுள் இறங்கியுள்ளது.

அந்த மூவரும் வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து, கழுத்தில் கத்தியை வைத்து 'நகைகள் எங்கே?' என மிரட்டி கொள்ளையிட முயற்சித்துள்ளனர்.

அவ்வேளை வீட்டின் உரிமையாளர் சத்தமாக கத்த, அயல் வீட்டினர் தமது வீட்டு மின் விளக்குகளை ஒளிரவிட்டுள்ளனர்.

அதனை அவதானித்த கொள்ளைக்கும்பல், தாம்கொண்டுவந்திருந்த பெரிய கத்தி ஒன்றை அந்த வீட்டிலேயே கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில்கோப்பாய்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை அதே வீட்டுக்கு சற்று தொலைவில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த முகமூடி கொள்ளைக்கும்பல், பாதிரியாரின் கழுத்துக்கு கத்தி வைத்து, பாதிரியாரிடமிருந்து 30 ஆயிரம் ரூபா பணம்மற்றும்தேவாலயஉண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்

## உபுல் றோஹண எச்சரிக்கை

எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வரட்சியான காலநிலை மற்றும் நீர் பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மிகக் குறைந்த நீர் உள்ள இடங்களில் குளித்தல், மீன்பிடித்தல் போன்ற செயற்பாடுகள் எலிக்காய்ச்சல் பரவுவதை அதிகரிக்கச்செய்யும் எனவும் குறைந்தளவு நீர்மட்டம் உள்ள இடங்களில் குளிப்பதால் தோல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெருநிறுவனங்கள் மட்டும் போதாது

கடும் வறட்சி காரணமாக நீர்மின் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் நாட்டின் மின்வெட்டு நடைமுறைக்கு வருமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது. மின்சார சபை வேறுபராமரிப்பு வேலைகள் என்கிற சாட்டில் மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் உத்தியோகப்பற்றற்ற மின்வெட்டை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. இதையடுத்து மீண்டும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களான காற்று, சூரிய ஒளி ஆகியவற்றைக்கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்பான விவாதங்கள் மீண்டும் சூடுபிடித்துள்ளன.

இலங்கையின் மின்சாரத் தேவையின் 70 சதவீதத்தை இந்தப் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் ஊடாகப் னபெறுவதற்கான ஆட்சியாளர்களின் இலக்கை 2030இல் அடைய முடியும் என்று மின்சக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதற்காக 6 பெரிய திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதில் ஒன்றான இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தினால்மன்னார்மற்றும்பூநகரியில்உருவாக்கப்படவுள்ள 500 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் 2025 தை மாதத்தில் முடிவடையும் என்றும் அறிவித்தார் அமைச்சர்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றுல் மூலங்களின் ஊடாக மின்சாரத்தைப் பெறும் ஆட்சியாளர்களின் திட்டம் முயற்சி வரவேற்கப்படவேண்டியதுதான். சுற்றுச்சூலுக்குப் பாதிப்பில்லாத வகையில் முன்னெடுக்கப்பட்டும் இந்தத் திட்டங்கள் நாட்டுக்குச் சிறந்த பயன்களைத் தரும் என்றும் எதிர்பார்க்கலாம். அதேநேரம் இந்தத் திட்டங்களை குறிப்பாக காற்றாலைத் திட்டங்களை மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் செயற்படுத்த முனையும்போது எதிர்ப்புக்கள் கிளம்பிவருகின்றன. அதனையும் கவனத்தில் எடுத்து திட்டங்களுக்கான இடங்களைத் தெரிவு செய்வது இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆட்சியாளர்களின் இலக்கை அடைவதற்கு பெரு நிறுவனங்களின் வழியான பெரு முதலீடுகளில் மட்டுமே ஆட்சியாளர்கள் தீவிரமாகக் கவனமெடுப்பது தெரிகின்றது. அதேநேரம் நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் வீட்டுக்கூரை சூரிய மின்கல மின் உற்பத்தித் திட்டத்தின் மீதும் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவேண்டும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மிகப் பெருமளவில் மின் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய வசதி நாட்டில் உண்டு. ஆனால், அதற்கான அடிப்படைக் கட்டமைப்பை மின்சார மார்க்கங்களில் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வரவில்லை. குறிப்பாக வடக்கில் வீட்டுக்கூரைகளில் இருந்து 20 மற்றும் 40 கிலோவாட் மின்சார உற்பத்திக்கான அனுமதிகளைப் பெறமுடியாத நிலையே இருக்கின்றது.

மின்விநியோகக்கட்டமைப்பில்தற்போதுள்ளமின்மாற்றிகளின் திறன் போதாமை காரணமாக இவ்வாறு பெரியளவிலான கூரைச் சூரியக்கல மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என்கிறார்கள் அதிகாரிகள். 5 கிலோ வாட் வரையிலான கூரை மின்திட்டங்களுக்கே அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த அளவு ஒரு வீட்டின் பகல் நேரத் தேவை அளவிற்கான மின் உற்பத்திக்கேபோதுமானது. அதன் மூலம் வீட்டு உரிமையாளருக்கு வருமானம்கிடைப்பதில்லை. அதேநேரம் 20 அல்லது 40 கிலோவாட் திட்டங்கள் மூலம் உரிமையாளர்கள் மாதாந்தம் சிறிய வருமானத்தையாவது பெற்றுக்கொள்ள முடியும். எனவே மின் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்தி வீட்டுக்கூரைத் திட்டம் ஊடான மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

அத்தோடுபெருநிறுவனங்களிடம்பெருத்திட்டங்களைவழங்கும் அரசு, அவற்றிடம் இருந்து அதிகவிலைக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்யவும் ஒப்பந்தம் செய்துகொள்கின்றது. பெரு நிறுவனங்கள் தங்கள் முதலீட்டுக்கு மேலாக இலாபம் பெறும் வகையில் இந்தக் கொடுப்பனவு ஒப்பந்தங்கள் அமைகின்றன. அதேநேரம், வீட்டுக்கூரைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் மின்சாரத்திற்கான கட்டணங்களை மிகக் குறைந்த அளவில் வழங்குவதற்கே அரசு முன்வருகின்றது. இந்தப் பாரபட்சமும் களையப்படவேண்டும். அப்போதுதான் வீட்டுக்கூரைத் திட்டத்தின் மூலமாக அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின்உற்பத்தி என்று கூறிக்கொண்டு தனியே பெரு முதலாளிகளுக்குச் சாதகமான திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்தாமல், நாட்டு மக்களும் பயன்பெறத்தக்க வகையிலான திட்டங்கள் மீதும் அக்கறை செலுத்தப்படுவது முக்கியம். அவையே நீடித்து நிலைத்துப் பயன்தரக்கூடியனவாகவும் இருக்கும்.

# பாக். பிரதமர் ஜியா-உல்-ஹக் இறந்த விமான விபத்தும்.. புட்டினை எதிர்த்த வாக்னர் படை தளபதி இறந்த விபத்தும்..

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**




புட்டினுக்கு எதிராக கிளர்ச்சி செய்த வாக்னர் குழு தலைவர் யெவ்ஜெனி பிரிகோசின் விமான விபத்தில் உயிரிழந்தார் என்ற தகவலால், மீண்டும் பரபரப்பில்மூழ்கியுள்ளனமேற்குலக ஊடகங்கள். இந்தச் சம்பவம் பற்றிய பல ஊகங்கள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. ரஷ்யா பற்றி மேற்குலக ஊடகங்கள் கற்பனைக் கதைகளைச் செய்திகளாக்குவதுஇதுவொன்றும் முதல் தடவையல்ல.

**விமான விபத்தா? சதியா?**

இந்த விமான விபத்தையும், 1988இல் முன்னால் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஹம்மது ஜியா-உல்-ஹக் கொல்லப்பட்ட விபத்தையும் வாக்னர் தளபதியின் கொலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு நிறையவே உண்டு.

ஓகஸ்ட் 17, 1988 அன்று பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பஹவல்பூர் நகரில் நடந்த விமான விபத்தில் கொல்லப்பட்டார் பாகிஸ்தான் முன்னாள் இராணுவ அதிபர் ஜியா உல் ஹக். ஜெனரல் ஜியா உல் ஹக்கின் சி-130 விமானம் விபத்துக்குள்ளாகவில்லை, கீழே வீழும் வரை கொண்டு வரப்பட்டு, வேண்டுமென்றே வீழ்த்தப்பட்டது என்றும் அது



ஒரு உள்ளகச் சதி எனவும் கூறியுள்ளார் ஜியா உல் ஹக்கின் மகன். விமானத்தில் மாம்பழப் பெட்டிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் ஏற்றப்பட்டதாக அவர் நம்புகிறார்.

அத்துடன் இந்தவிபத்தில் ஜெனரல்ஜியா, அப்போதைய அமெரிக்க தூதர் அர்னால்ட் லூயிஸ் ரபேல் மற்றும் பல மூத்த பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுடன் சி-130 விமானத்தில் பயணம் செய்த அனைவரும் இறந்தது இன்று வரை மர்மமாகவே இருந்து வருகிறது.

**புட்டினை எதிர்த்த வாக்னர் தளபதி உயிரிழப்பு**

அதேபோன்றுதான் வாக்னர் கூலிப்படையின் தளபதி யெவ்ஜெனி பிரிகோசினும்

எப்படியென்று தெரியாமலேயே விமான விபத்தில் உயிரிழந்துவிட்டார். அதுவும் ரஷ்ய அதிபருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யப்போவதாக அறிவித்து பின்னர் அதிலிருந்து பின்வாங்கிய சில மாதங்களுக்குள் அவர் மர்மமாக உயிரிழந்துவிட்டார்.

ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் இருந்து செயின்ட் பீற்றர்ஸ்பர்க் நகருக்குச் சென்ற தனியார் ஜெட் விமானம் ஒன்று டிவெர் (Tver) நகர் அருகே திடீரென வெடித்துச் சிதறி விபத்துக் குள்ளானது. இதில் ஜெட் விமானத்தில் பயணம் செய்த 3 பணியாளர்கள், 7 பயணிகள் என மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர் என்று


**Zia dies in plane crash**
US envoy, Gen. Akhtar among dead
Ishaq takes over as President
10-day mourning declared
Inquiry ordered

கூறப்படுகிறது.

இந்த ஏழு பயணிகளில் ரஷ்ய அதிபருக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் குழு தலைவர் யெவ்ஜெனி பிரிகோசினும் (Wagner Leader Yevgeny Prigozhin) ஒருவர் என தகவல் வெளியாகியது. மேலும் ரஷ்யாவின் விமானப் போக்குவரத்து நிறுவனம் வெளியிட்டுள்ள விமானத்தில் இருந்தவர்களின் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலில் பிரிகோசினின் பெயரும் உள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையே கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இன்றுவரை போர் நடந்துவருகிறது. ரஷ்யா உக்ரைனில் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் ரஷ்யா சார்பில் ரஷ்ய ராணுவத்தினருடன் இணைந்து வாக்னர் குழுவினர் உக்ரைனுக்கு எதிராக போரில் ஈடுபட்டு வந்தனர். இந்தக் குழு ரஷ்ய அதிபர் புதினின் நண்பர் யெவ்ஜெனி பிரிகோசின் என்பவர் தலைமையில் செயல்பட்டு வந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவிற்கு எதிராக கிளர்ச்சியை வாக்னர் குழு தலைவர் யெவ்ஜெனி பிரிகோசின் அறிவித்தார். ரஷ்யாவின் அதிபர் பதவியில் இருந்து புதினை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பெலாரஷ்ய அதிபர் லுகாஷென்கோ தலையிட்டு பேச்சு நடத்தி பிரச்சனையை சரி செய்த பிறகு, வாக்னர் ஆயுதக் குழுவின் தலைவரான யெவ்ஜெனி பிரிகோசின் ரஷ்யாவுக்கு எதிரான கிளர்ச்சியை முடிவுக்குகொண்டுவந்துவிட்டதாக அறிவித்தார். இந்த நிலையில்தான் தற்போது விமானவிபத்தில் யெவ்ஜெனி பிரிகோசின் உயிரிழந்துள்ளார் என வெளியாகிய செய்தி ரஷ்யாவில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

விபத்து நடந்த இடத்தில் எட்டு பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரிகோசினின் உடல் கிடைத்தது குறித்துத் தகவல் எதுவும் இல்லை.

**ஜியா-உல்-ஹக் விமான விபத்து:**

பாகிஸ்தான் முன்னாள் அதிபரும், ராணுவ தளபதியுமான ஜெனரல் முகமது ஜியா உல் ஹக்கின் மகன் முஹம்மது இஜாஸ் உல் ஹக், தனது தந்தையின் இறப்புக் குறித்து அதிர்ச்சியளிக்கும் சில தகவல்களை சில வருடங்களுக்கு முன் வெளியிட்டிருந்தார். ஜெனரல் ஜியா-உல் ஹக்கின் மகன், தனது தந்தையின் விமானம் விபத்துக்குள்ளாக வில்லை, ஆனால் கீழே வீழும் வரை கொண்டு வரப்பட்டதாக நம்புகிறார். ஒரு அமெரிக்க அதிகாரியைத் தவிர, விமான விபத்தில் இறந்தவர்களுக்கு உடற்கூறாய்வு செய்யப்படவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனரல் ஜியா, அப்போதைய அமெரிக்க தூதர் அர்னால்ட் லூயிஸ் ரபேல் மற்றும் பல மூத்த பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளுடன் சி-130 விமானத்தில் பயணம் செய்த அனைவரும் விபத்தில் இறந்தது இன்றுவரை மர்மமாகவே இருந்து வருகிறது.

துருக்கிய செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டி ஒன்றில் ஜியா உல் ஹக்கின், சி-130 விமானம் விபத்துக்குள்ளாகவில்லை, வேண்டுமென்றே வீழ்த்தப்பட்டது என்ற சதிகோட்பாட்டை அவரது மகன் ஆதரித்தார். விமானத்தில் ஏற்றப்பட்ட மாம்பழப் பெட்டியில் வெடிப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அவர் நம்புகிறார்.

துருக்கி அனடோலு ஏஜென்சிக்கு ஹக்கின் கூறுகையில், பாக்கிஸ்தான் மற்றும் அமெரிக்க அதிகாரிகளின் கூற்றுகள் முரணானவை, விபத்து இல்லை என்றும் நாசவேலையின் விளைவு என்றும் இரு தரப்பினரும் கூறியுள்ளனர்.

விமானத்தின் காக்பிட்டில் (Cockpit ) நரம்பு வாயு



வைக்கப்பட்டிருந்ததாகவும், அது விடுவிக்கப்பட்டபோது, இரு விமானிகளும் செயலிழந்து விட்டனர் எனவும் அவர் நம்புகிறார்.

மாம்பழப் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் தவிர, ஒரு எறிகணையும் விமானத்தை வீழ்த்தியதாக ஹக் கூறியுள்ளார்.

தனது தந்தையின் இறப்புக் குறித்த புத்தகத்தை எழுதிவரும் ஹக், முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் மிர்சா அஸ்லாம் பெக் மற்றும் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் மஹ்மூத் அலி துரானி ஆகியோர் ஜெனரல் ஜியாவின் இறப்பில் பங்கு வகித்திருக்கலாம் என சந்தேகிக்கிறார். அவர்களுக்கு ஒத்திசைவாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்க உளவு அமைப்புகளும் இந்த சதியில் ஈடுபட்டதாக ஹக் கூறுகிறார்.

விபத்து நடந்தபோது, நாங்கள் எங்களால் முடிந்தவரை இந்த வழக்கைத் தீவிரமாகத் தொடர முயற்சித்தோம். ஆனால் மூடிமறைப்பு மிகவும் வலுவாக இருந்தது. நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் மறைக்கப்பட்டதால், உண்மையை எங்களால் கண்டடைய முடியவில்லை.

ஒருவிஷயம்தெளிவாகத் தெரிந்தது, அமெரிக்க-பாகிஸ்தான் விமானப்படை கூட்டு விசாரணைக்குப் பிறகு, தொடக்கத்திலிருந்தே அமெரிக்கர்கள், இது ஒரு விபத்து என்பதை நிரூபிக்க தங்களால் முடிந்தவரை முயற்சித்தனர், என்று அவர் பேட்டியின் போது கூறினார்.

**ஆப்கானில் சோவியத் துருப்புக்கள்**

ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக, சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பிராந்தியப் போராட்டத்தின் மையத்தில் ஜியா இருந்தார். டிசெம்பர் 1979 இல், சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானுக்குள் ஒரு கம்யூனிச ஆட்சியை நிறுவின. அப்போதிருந்து, ஆப்கானிஸ்தானின் சோவியத் ஆதரவு ஆட்சியாளர்களுக்கும் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் பல ஆப்கானிஸ்தான் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

அந்த நேரத்தில், ஆப்கானிய கிளர்ச்சியாளர்களான முஜாஹுதின்களுக்கு அமெரிக்க ஐஊடாக ஜியா உதவினார். அத்துடன் பாகிஸ்தானில் முஜாஹுதின் பயிற்சி தளங்களை நடத்த அனுமதித்தார்.

**இந்தியா மீதும் குற்றச்சாட்டு**

ஜியாவின் இறப்புச் செய்தி வெளி வந்தவுடன், பல பாகிஸ்தானியர்கள் தங்கள் நீண்டகால எதிரியான இந்தியாவை குற்றஞ்சாட்டினர். ஒரு காலத்தில் ஒரே பிரிட்டிஷ் காலனியாக இருந்த இரு நாடுகளும், 1947இல், தனித்தனியாகப் பிரிந்து சுதந்திரம் அடைந்ததிலிருந்து முரண்படுகின்றன. அதற்குப் பிறகு, இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் இந்தியாவும், முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தும் பாகிஸ்தானும் மூன்று போர்களில் ஈடுபட்டுள்ளன.

ஆகவே வல்லரசு நாடுகள் தங்கள் எதிரிகளைக் களையெடுக்க ஏதாவது ஓர் வகையில் திட்டம் தீட்டி முடித்துக்கட்டி விடுவர். இந்த இரு சம்பவங்களுமே விபத்தா அல்லது சதியா என்பது இன்னமும் எவருக்கும் புரியாத மர்மமாகும்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Jce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பாலர் பாடசாலை மாணவர்களின் சுகாதார மேம்பாட்டு நிகழ்வுகள்




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக பாலர் பாடசாலை மட்டங்களில் சுகாதார மேம்பாட்டை விஸ்தரிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

பணிமனையின் சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம். பைரூஸ் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்நிகழ்வில் விசேட வளவாளர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச் ரிஸ்பின், பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் டாக்டர் எம்.எச்.கே.சரூக், மாவட்ட சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம். பைரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாலர் பாடசாலைகளில் போசனை மட்டத்தை அதிகரிப்பது, வாய் சுகாதாரத்தை மேம்படுத்தி சிறுவர்களின் வாய் சுகாதாரத்தை பாதுகாப்பது, சிறார்களின் பொது சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த நிகழ்வின்போது கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பாலர் பாடசாலை பணியகத்தின் உத்தியோகத்தர்கள் என்.சி.டி.கியு. மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள் பாடசாலை பற்சிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)





# குருநாகலில் மறைத்து வைக்கப்பட்டுள்ள துப்பாக்கி உள்ளிட்ட பொருள்கள் மீட்பு

கழிவுநீரை அகற்றுவதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் மறைத்து வைத்திருந்ததாக கூறப்படும் 2 துப்பாக்கிகள் , கத்தி மற்றும் பல உபகரணங்கள் குற்றப்புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

குருநாகல், மல்லவப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றை புதிதாக வாங்கிய ஒருவர் கழிவுநீரை அகற்றுவதற்காக வெட்டப்பட்ட குழியில் சந்தேகத்திற்கு இடமாக பொதி செய்யப்பட்ட பையொன்று இருப்பதை அவதானித்த நிலையில், குருநாகல் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

குறித்த தகவலின் அடிப் படையில் கைத்துப்பாக்கிகள், ஏழு கத்திகள், 12 துப்பாக்கி தோட்டாக்கள், உள்ளிட்ட பல பொருள்களை குருநாகல் குற்றப்புலனாய்வு திணைக் கள அதிகாரிகள் மீட்டுள்ளனர். (05)

# மயோன் முஸ்தபா மறைவு தலைவர்கள் பலரும் அஞ்சலி



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உயர் கல்வி பிரதியமைச்சருமான மயோன் முஸ்தபாவின் மரணச்செய்தி கேட்டு மிகக் கவலையடைகிறேன். அரசியலில் நீண்ட காலம் அவரும் அவரது குடும்பமும் அதிகமான சமூகப்பணிகளை ஆற்றியவர்கள் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், முன்னாள் அமைச்சருமான கலாநிதி எம்.எல். எம்.ஏ. ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

மேலும், கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த சமூக சேவை நிறுவனங்களினூடாக பல்வேறு பட்ட சமூக பணிகளை செய்தவர். எல்லா மக்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் நற்குணம் கொண்டவர்.

தன்னுடைய அரசியல் காலங்களில் பல்வேறு பதவிகளை வகித்து அதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு பல பணிகளை செய்தவர். மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நல்ல அமல்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!

அவருடைய குடும்பத்துக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவரது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் பாரம்பரியமிக்க அரசியல் குடும்பத்தின் அரசியல் வாரிசுகளில் ஒருவராக அரசியல் களமாடி தன்னை மக்கள் சேவகனாகப் பல்வேறு காலப்பகுதிகளிலும் நிரூபித்த உயர்கல்வி முன்னாள் பிரதியமைச்சர் மரியாதைக்குரிய எம்.எம். முஸ்தபா (மயோன் முஸ்தபா) காலமான செய்தி; பேரிடியாக என்னை வந்தடைந்தது. (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன்) என்று முன்னாள் இராஜங்க அமைச்சரும், ஸ்ரீ.ல.மு.கா பிரதித்தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை தொகுதியின், அம்பாறை மாவட்டத்தின், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்காக தனது அதிகார காலத்தில் உரத்து குரல் கொடுத்ததுடன் இலங்கை மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்த தனது கல்வி நிறுவனத்தின் ஊடாக விதை போட்ட ஒரு கல்விமானாகவும், இலங்கையின் கல்வி மேம்பாடு தொடர்பில் அக்கறை கொண்ட புத்திஜீவியாகவும் தன்னை நிரூபித்த ஓர் அரசியல்வாதியாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு கவலையளிக்கிறது.

அரசியலில் ஒரே மேடையிலும், எதிர்க்கட்சி மேடையிலும் நாங்கள் அமர்ந்திருந்தாலும் கூட மக்களுக்கான விடயங்களில் ஒருமித்து நின்ற மக்களின் சேவகராகவே நான் அவரைக் காண்கிறேன். அந்த அறிக்கையில் மேலும், அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களின் வீட்டுத்திட்ட தேவைகள் சம்பந்தமாக தனது அதிகார காலத்தில் குரல் கொடுத்ததுடன் மட்டுமன்றி வீட்டுத்திட்ட நிர்மாணிப்பு தொடர்பில் அரச தலைவர்களுடன் பேசி அதற்கான முயற்சிகளை அவர் முன்னெடுத்திருந்தமையை இங்கு எண்ணிப்பார்க்கிறேன். குறிப்பாக கல்முனை தொகுதி சுனாமி வீடமைப்பு திட்ட நிர்மாணிப்பு தொடர்பில் நானும் அவரும் ஒன்றித்து செய்த எத்தணிப்புக்களின் போது அவர் காட்டிய முனைப்பை இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கிறேன்.

பல்வேறு காலப்பகுதியிலும் கல்முனை தொகுதியின் வளர்ச்சியில் கரிசனை கொண்ட அவரின் சிந்தனைகள் கௌரவத்துக்கு உரியவை. சமூகம் தொடர்பிலும், கல்முனை மண் தொடர்பிலும் அவர் கொண்டுள்ள பற்று என்னை ஆச்சரியப்படுத்தியது. தனது அரசியலுக்காக கல்முனை மக்களை துண்டாட முனையாத அவரின் அரசியல் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியதாக காண்கிறேன். மிக நீண்ட தூர நோக்கு கொண்ட பல ஆலோசனைகளை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எனக்கு வழங்கிய அவரின் மரண செய்தி என்னுள் ஆழ்ந்த சோகத்தை உண்டாக்கியுள்ளது.

பிரதேச, கட்சி வேறுபாடுகளை மறந்து முஸ்லிம் சமூகம் என்ற கொள்கையில் உறுதியுடன் இருந்தவர். முஸ்லிம் சமூகத்தின் உரிமை விடயங்களில் விட்டுக் கொடுப்புக்கள் இல்லாத ஒருவராக மிளிர்ந்தவர். அண்மையில் அவர் சுகவீனமுற்ற நிலையில் அவரை சுகம்விசாரிக்க வீட்டுக்கு சென்ற போதும் கல்முனை தொகுதி அரசியல் விடயங்கள், இலங்கை முஸ்லிம் அரசியலின் எதிர்காலம் பற்றி நீண்ட நேரம் சிநேகபூர்வமாக பேசிய அவரது கருத்துக்கள் இன்று என்னுள் அசைபோடுகின்றன.

அவரின் இழப்பால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர், ஆதரவாளர்கள், நண்பர்களுக்கு எனது ஆறுதல்களை தெரிவித்துக்கொண்டு காலமான என் நெஞ்சுக்கு நெருக்கமான மயோன் முஸ்தபா அவர்களின் நல்லமல்களை பொருந்திக்கொண்டு பாவங்களை மன்னித்து உயரிய ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயரிய சுவர்க்கத்தை வழங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிராக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.(05)

# இலங்கைக்கான அடுத்த இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் இறுதிக்கட்ட போரின்போது கொழும்பில் கடமையாற்றியவர்



ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்திய தூதுவராக இராஜதந்திர சேவையில் உள்ள சந்தோஷ் ஜா இலங்கைக்கான அடுத்த உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படவுள்ளார். 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை காலமும் கொழும்பில் உயர்ஸ்தானிகராக இருக்கும் கோபால் பாக்லே ஆஸ்திரேலியாவில் இந்தியாவின் இராஜதந்திர பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவுள்ளார்.

2020 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்திய தூதுவராக நியமனம்பெற்ற சந்தோஷ்ஜா, 2019 முதல் ஜூலை 2020 வரை உஸ்பெகிஸ்தானில் இந்தியத் தூதராகப் பணியாற்றியுள்ளார்.

மேலும், 2017 2019 ஆண்டுகளில் வொஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதுவராகக் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன், 2015-2017 வரையிலான ஆண்டுகளில் இந்திய வெளிவிவகார அமைச்சின் கொள்கை திட்டமிடல் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இந்த காலப்பகுதியில், இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய ஈடுபாடுகளுக்கும் சவால்களுக்கும் பதிலளிக்கும் திறன் கொண்ட இராஜதந்திர பிரிவை உருவாக்க பங்களிப்பு செய்திருந்தார்.

குறிப்பாக, முக்கிய இந்திய வெளியுறவுக் கொள்கை முன்முயற்சிகளை உருவாக்குவதிலும், பல மூலோபாய உரையாடல் மன்றங்களை நிறுவுவதிலும் நெருக்கமாக செயற்பட்டவராகவே இராஜதந்திரி சந்தோஷ் ஜா காணப்படுகிறார்.

அதே போன்று பூகோள அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மையப்படுத்தி உலகளவில் புகழ்பெற்ற ரெய்சினா கலந்துரையாடல்களிலும் முக்கிய பங்கை வகித்துள்ளார். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான விடயங்களையும் கையாண்டுள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்ட போர் இடம்பெற்ற 2007 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் முதன்மை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அதனை தொடர்ந்து, அமெரிக்க - இந்திய அணு ஆயுத பேச்சு குழுவின் உறுப்பினராகவும் பொறுப்புக்களை ஏற்றிருந்தார். இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்தியாவின் சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுகளில் முக்கிய பங்காற்றியுள்ளார். குறிப்பாக, இலங்கையில் இறுதிப்போர் முடிவடைந்த 2009ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மற்றும் கட்டுமான துறைகளை மேம்படுத்தும் இந்தியத் திட்டங்களிலும் முக்கிய பங்கை வகித்திருந்தார்.

எனவே, இலங்கையின் உள்ளக அரசியல் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பரந்துபட்ட அனுபவத்தை கொண்ட மூத்த இராஜதந்திரியான சந்தோஷ் ஜாவை கொழும்பில் அடுத்த உயர்ஸ்தானிகராக கடமைகளை பொறுப்பேற்க டெல்லி அனுப்புகிறது.

இலங்கையை மையப்படுத்திய சீனாவின் அச்சுறுத்தல்கள் குறித்து இந்தியாவின் மூலோபாய கவலைகள் அதிகமாக காணப்படுகின்ற சூழலில் இந்த நியமனம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# மட்டு. மாநகர சபையால் இந்து மயானம் துப்புரவு



மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் பொது மயானங்களைத் துப்புரவு செய்யும் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி நகரின் மத்தியில் அமைந்துள்ள கள்ளியங்காடு இந்து மயானத்தை துப்புரவு செய்து அழகுபடுத்தும் பணிகள் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் சனிக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன.

தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவும் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சிரமதானப் பணிகளில் மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் த.டமராஜ் உள்ளிட்ட சுகாதார பகுதி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சிரமதானப் பணிகளின் போது பொதுமக்கள் தமது இறுதி சடங்குகளை அசௌகரியங்கள் இன்றி முன்னெடுப்பதற்கு ஏதுவாக அங்கு அமைக்கப்பட்டுள்ள உள்ளக பாதைகளும் சீரமைக்கப்பட்டதுடன், இரவு வேளைகளில் அந்தப் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் எல்.ஈ.டி. மின்குமிழ்களும் இதன்போது பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த மாதத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் 22 ஆயிரத்து 667 இந்திய பிரஜைகள் வருகை தந்துள்ள நிலையில், இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீனாவில் இருந்து 7 ஆயிரத்து 896 பயணிகளும் ஜேர்மனியில் இருந்து 6 ஆயிரத்து 966 பயணிகளும் பிரான்சிலிருந்து 5 ஆயிரத்து 584, பயணிகளும் ரஷ்யாவில் இருந்து 5 ஆயிரத்து 296, பயணிகளும் இத்தாலியில் இருந்து 4 ஆயிரத்து 666, பயணிகளும் ஆஸ்திரேலியாவில் இருந்து 4 ஆயிரத்து 092, பயணிகளும் கனடாவில் இருந்து 3 ஆயிரத்து 988 பயணிகளும் வருகைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 8 லட்சத்து 77 ஆயிரத்து 867 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## சிறுவர் பாதுகாப்புவாரத்தை முன்னிட்டு கொக்கிளாயில் விழிப்புணர்வு நடைபவனி



மதுரம் அபிவிருத்தி நிலையம் அமைப்பினரால் சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு 'சிறுவர் வன்முறையை இல்வாதொழிப்போம்' என்னும் தொனிப் பொருளில் கிராமந்தோறும் விழிப்புணர்வு நடைபவனி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.





அந்தவகையில்வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் குறித்த விழிப்புணர்வுநடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் வன்முறைகளுக்கெதிரானபதாதைகளைத் தாங்கியவாறு, சிறுவர் வன்முறைகளுக்கெதிரான கோசங்களை எழுப்பி இந்த விழிப்புணர்வு நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

இந்த சிறுவர் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியில் மதுரம்அபிவிரித்திநிலையம் அமைப்பின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், பொது மக்கள், சிறார்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (05)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுபராய மேம்பாட்டு பயிற்சி

## சம்பளம் தொடர்பில் இந்த ஆட்சி அக்கறையாம்



முன்பள்ளி ஆசிரியர்களுக்குசிறுபராயமேம்பாடு குறித்து முறையான பயிற்சிகளைவழங்கநடவடிக்கை எடுக்கப்படும் என மகளிர் மற்றும்சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும்கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்கீதாகுமாரசிங்க -

குழந்தை பிறந்தது முதல் 18 வயது வரை சிறுவர்களாகவே அவர்கள் கருதப்படுகின்றார்கள்.எனவே அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி என்பன தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அந்த வகையில் எமது அரசாங்கமும்இவ்விடயங்கள் குறித்து அவதானம்செலுத்தி வருவதுடன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பில் பல்வேறுவேலைத்திட்டங்கள் முன்னெடுப்படுகிறன.

அதன்படி, ஒருகுழந்தை பிறப்பதற்குமுன்னரேஅந்தக் குழந்தையின் போசாக்கு குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளதால், குறைபோசாக்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், போசாக்கான உணவைப்பெறுவதற்கான கொடுப்பனவு அட்டை வழங்கும்திட்டம்தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் படுவதாகவும்,பிரதேசசெயலக ரீதியில் இந்தச்செயன்முறை முன்னெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு அரச தாய் - சேய் நல மத்திய நிலையங்களில் பதிவு செய்த, கர்ப்பிணித்தாய்மார்களுக்காக அங்குநடைபெறும் கிளினிக்களுக்கு வருகை தருகின்றவர்களில் போசாக்குக் குறைபாடு உள்ளவர்கள் என்று அடையாளம் காணப் படுபவர்களுக்கு இந்தக் கொடுப்பனவுஅட்டைவழங்கப் படுவதாகவும் இந்த வருடத்துக்கு மாத்திரம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொடுப்பனவுஅட்டைவழங்குவதற்காக அரசாங்கம் 11 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று, பாடசாலை செல்லும் மாணவர்களில் குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு போசாக்கான காலை உணவை வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலும், இயலுமான வரைசிறுவர்களின் உணவு, சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருவதாகவும்தெரிவித்தார்.

மேலும், அரச மற்றும் அரசசார்பற்றநிறுவனங்களின் மூலம் இந்நாட்டில் இயங்கும் முன்பள்ளிகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாகவும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுவர்களின் கல்வி மாத்திரமன்றி அவர்களுடன் பேணப்பட வேண்டிய உறவு மற்றும் அவர்களின் பாதுகாப்பு, தொடர்பிலும் அவசியமான பயிற்சிகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், முன்பள்ளிகள் இயங்கும் சூழல், ஆசிரியர்களின் தகைமைஉள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்த வுள்ளதோடு அது தொடர்பில் சட்ட வரையறைகளை உருவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமை மாத்திரமன்றி பல வருடகால அனுபவத்தின் ஊடாக சிறப்பாக முன்பள்ளிகளை நடத்திவருபவர்களையும் இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் கல்வித் தகைமை மற்றும் பயிற்சி பெற்ற ஒருவருடன் அனுபவமிக்க ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்து இந்த முன்பள்ளிகளை சிறப்பாக நடத்த திட்டமிட்டுள்ளதுடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளம் தொடர்பிலும் அரசாங்கம் கவனம்செலுத்தி வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

'இந்த நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்மற்றும்சிறுவர் துஷ்பிரயோகம்குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் சிறுவர்களை தெளிவூட்டுவது குறித்து பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் மாத்திரமன்றிசிறுவர்களுக்கு நிகழும் எந்தவொரு துஷ்பிரயோகம்தொடர்பிலும் அவர்கள்தமதுபெற்றோரிடம் முறையிடத் தயக்கம் காட்டுகின்றனர். எனவே சிறுவர்கள் அதிகளவில் தமது நேரத்தைக் கழிப்பது பாடசாலைகளில்என்பதனால், பாடசாலைகளில் சிறுவர் உளவளத்துணை ஆலோசகர்களை நியமித்தல் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான துஷ்பிரயோகம்தொடர்பான சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன. சில பெண்கள் தங்களுக்கு இடம்பெற்ற துஷ்பிரயோகம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடவிரும்புவதில்லை. எல்லோர் முன்னிலையிலும் இவ்விடயங்கள் குறித்து கூறுவதற்கு பெண்கள் வெட்கப்படுகிறார்கள். அந்த வகையில், இவ்வாறான முறைப்பாடுகளை விசாரிக்கவென பொலிஸ் நிலையங்களில்தனியான அறைகளை ஒதுக்குவதுடன் தனியான மகளிர் பொலிஸாரையும் நியமிக்கவேண்டும்.எனவே, அத்தகைய பெண்களைக் கையாள்வதில் சிறப்புக் கவனம்செலுத்தவேண்டியுள்ளதுடன் அவர்களுக்குதகுந்த பாதுகாப்பு வழங்கப்படவும் வேண்டும்.மேலும்,பெண்கள் மீதானதுஷ்பிரயோகம்மற்றும் கொலைகள்தொடர்பாக, ஊடக நிறுவனங்கள் செய்திகளை வெளியிடும்போதுயாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுய ஒழுக்கத்தின் கீழ் செயல்படுவதில் கவனம் செலுத்தவேண்டும்.' என்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேலும் தெரிவித்தார். (05)

## பிரேதங்களை ஏற்றிச் செல்ல யாழ்.போதனாவுக்கு வாகனம்

### எஸ்.கே.நாதனின் அன்பளிப்பில்




எஸ்.கே.நாதனால்நேற்று (சனிக்கிழமை)யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உயிரிழந்தவர்களின் பிரேதங்களை ஏற்றும் வண்டி ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஏழை மக்கள் இறந்தவர்களின் உடலை எடுத்து செல்வதற்கு பெருந்தொகையானபணம்செலவழிக்க வேண்டிய நிலை உள்ளது.

இதனால் அவர்கள் இக்கட்டானநிலைக்குதள்ளப் பட்டு இறந்தவரின் உடலைக் கொண்டுசெலவதில் பெரிதும் சிரமப்படுகின்றார்கள்.

மக்களின் இந்நிலை கண்டு வைத்தியசாலை நிர்வாகம் எஸ்.கேநாதனிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கஅவர்இந்தவாகனத்தை நன்கொடையாக வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளார். (05)

## இலங்கையின் இளம் கண்டுபிடிப்பாளராக கல்முனை ஸாஹிரா மாணவன் தெரிவு



இலங்கைப் பொறியிலாளர்கள் நிறுவனம் வருடத்துக்கான இளம் கண்டுபிடிப்பாளர் எனும் தலைப்பில் மாகாணரீதியில்அண்மையில் போட்டி ஒன்றை நடத்தியது. அதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அகில இலங்கைரீதியில்இறுதிச்சுற்று அண்மையில் இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவன தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கல்முனை கல்வி வலய கல்முனை ஸாஹிறாக் கல்லூரி (தேசிய பாடசாலை) சார்பில் கலந்து கொண்ட முஹம்மட் அதீப் (உயர்தர கணித பிரிவு மாணவன்), பாடசாலைப் பிரிவில் பங்குபற்றி இறுதி சுற்று வரை சென்று சாதனையை நிலைநாட்டி உள்ளார்.

இந்த மாணவனுக்கு பாடசாலை சார்பாகவும் பாடசாலை இளம் கண்டுபிடிப்பாளர் கழகம் சார் பாகவும் புத்தாக்குனர் கழகம் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர். (05)

## பிரமிட் மோசடித் திட்டத்தில் ஈடுபட்டு வந்த இரு சீன பிரஜைகள் உட்பட நால்வர் கைது

சர்வதேச மட்டத்தில் பிரமிட் மோசடித் திட்டத்தில் ஈடுபட்டு வந்த இரண்டு சீன பிரஜைகள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சீனப் பிரஜைகள் இருவரும் பிரமிட் மோசடி திட்டத்தின் மூலம் சுமார் 4 கோடி ரூபா மோசடி செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி கொழும்பு, பொரளை பகுதியிலுள்ள வீடொன்றில் 7 டை;சம் ரூபா வாடகை அடிப்படையில்பெற்றுவசித்து வந்த சீன பிரஜை ஒருவர் தனது 7 மடிக்கணினிகள், 17 மில்லியன் ரூபா பணம் மற்றும்வான்ஒன்றும்சிலரால் கொள்ளையிடப்பட்டுள்ளக எனபொலிஸில்முறைப்பாடு செய்திருந்தார்.

அதன்படி கொழும்பு தெற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் பொலிஸார் தொலைபேசி தரவுகள் மற்றும் சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்துவிசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டபோது அவர்களில் சீன பிரஜையின் சாரதியும் அடங்குகிறார் எனத் தெரியவந்துள்ளது. முறைப்பாடு செய்த சீனப் பிரஜை சந்தேகநபர்களுக்கு15இட்சம் ரூபாவை பெற்றுக்கொடுத்து தனது சொத்துக்களை கொள்ளையடித்து செல்வதைப் போன்று திட்டமிட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைவாக குறித்த சீனப் பிரஜை மற்றும் அவரது மற்றொரு சீன நண்பரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் கொழும்பு துறைமுகநகரத்தில்வேலைத் திட்டங்களை மேற்கொள்வதாக இருவரும் நாட்டில் பாரியளவில் பிரமிட் மோசடி திட்டத்தை மேற்கொண்டுள்ளனர்எனவும்இதன்போது 4 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சீனப் பிரஜை பிரமிட் மோசடி திட்டத்தின் மூலம் பெற்ற பணத்தை கெசினோ சூதாட்டத்துக்கு பயன்படுத்தி இழந்தமையால் அதனை மறைப்பதற்காகவே இவ்வாறான போலியான திட்டத்தை அரங்கேற்றியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் பிரமிட் திட்டத்தைமேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் சீன பிரஜை கொழும்பு, குருந்துவத்தையில் உள்ள வீட்டை பொலிஸார் சோதனையிட்டனர். ஏற்கனவே அங்கிருந்து 15 சீனப் பிரஜைகள் மடிக்கணினிகளுடன் தப்பிச் சென்றுள்ளனர். கைது செய்யப்பட்ட சீன பிரஜைகள் சர்வதேச அளவிலான பிரமிட் மோசடி திட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூலம் கொள்ளையடித்ததாகக் கூறப்பட்ட வான், சட்ட விரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 30 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள், மடிக்கணனிகள் மற்றும் கெப் வண்டி ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## 3 நாள்களுக்குள் சுமார் 20 ஆமைகள் உயிரிழப்பு

நீர்கொழும்பில் இருந்து களுத்துறை வரையிலான கடற்கரையோரத்தில் மூன்று நாள்களுக்குள் சுமார் 20 ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கபுங்கொட, பமுனுகம, முத்துராஜவெல சதுப்பு நிலம் மற்றும் இந்துருவ ஆகிய கடற்கரையோரங்களில் இருந்துஇந்தஇறந்தஆமைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளனஎன வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், வனவிலங்கு திணைக்களம் இறந்த நிலையில் ஆமைகள்கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

எனினும், நீருக்கடியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக ஆமைகள் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில், உயிரிழந்தஆமைகளின்உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொண்டு நீதிமன்றில் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறுகொழும்புகோட்டை நீதவான் திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இறந்த அனைத்து ஆமைகளும் ஒரே அளவு மற்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று இதற்கிடையில், தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும்மேம்பாட்டு நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது. மேலும், மேற்படி கடல் பகுதிகளில் உள்ள நீர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் நாரா அறிவித்துள்ளது.(05)

## கோழி இறைச்சி விலை 100 ரூபாவால் குறைப்பு

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின்விலையை100 ரூபாவால் குறைக்க அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அகிலஇலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்க பிரதிநிதிகளுடன் வெள்ளிக் கிழமை விவசாய அமைச்சில் இடம்பெற்றசந்திப்பின் பின்னர் அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2023இல் வெளியிடப்பெற்றது.